வந்து, அது குறித்து 28-1-1983 அன்று தங்களிடத்திலே ஒரு விரிவான கடிதம் கொடுத்து இருக்கிறார். ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குக் கொலை மிரட்டல் வருமானால் அவருக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது தங்களுடைய பொறுப்பிலே அடங்கும். அந்தக் கடிதத்தின்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லா இடங்களிலும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பது பேரவைத் தலைவரின் கீழ் வராது. அவருடைய கடிதத்தை முதல்வர் அவர்களுக்கும் முன்னவர் அவர்களுக்கும் அனுப்பி இருக்கிறேன். அதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறேன்.

(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்னைகள்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்வது குறித்த........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். எதற்கும் ஒரு வரைமுறை இருக்கின்றது. இந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ கொண்டு வாருங்கள். அதைவிட்டு பொத்தாம்போக்கிலே எழுந்து சொல்வதை அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) அப்படியானால் அதை என் அறையிலே வந்து கேளுங்கள். அவையிலே அனுமதிப்பதற்கு இல்லை. உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சிவசாமி பேசப் போகிறார். அவரிடம் சொல்லிப் பேசச் சொல்லுங்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செரணம்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். உறுப்பினருடைய உரிமையைப் பாதிக்கின்ற ஒரு விஷயம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் அதை உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வாருங்கள்.

3. கவன ஈர்ப்பு.

அம்மாண்டிவிளையிலுள்ள கயிறு ஆலை மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.